**வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**
**முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**ந.க..எண். 222/மாஒ6/SMC/ஒபக/2021, நாள். 11.03.2022**

**பொருள் :** வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – பள்ளி மேலாண்மைக் குழு (SMC) பள்ளி மேம்பாட்டுத் திட்டம் (SDP) 2020–21 – EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல் –சார்பு.

**பார்வை :** சென்னை–6, மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களின் கடித ந.க.எண்.449/C7/SMC/SS/2021, நாள். .03.2022.

*********

பார்வையில் காணும் சென்னை–6, மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களின் கடிதத்திற்கிணங்க ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் கீழ் 2020–21–ம் கல்வியாண்டிற்கான பள்ளி மேலாண்மைக் குழு (SMC) உறுப்பினர்களுக்கான மேலாண்மைத் திறன் வளர்த்தல் மற்றும் விழிப்புணர்வு சார்ந்த பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் தயாரிப்பது சார்ந்தும் பயிற்சி அளிக்கப்பட்டது. 2022–23 திட்ட ஏற்பளிப்பு குழு கூட்டத்தில் பெரும்பாலான பள்ளிகளில் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் EMIS தளத்தில் பதிவேற்றம் செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே,

- ❖ இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பள்ளி மேம்பாட்டுத் திட்ட படிவத்தில் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழுவுடன் இணைத்து தயாரித்தல்.
- ❖ பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர், உபத் தலைவர், தலைமையாசிரியர் கையொப்பமிட்ட EMIS தளத்தில் பதிவேற்றம் செய்தல் இதன் வழிமுறை பின்வருமாறு
- ❖ 14.03.2022 திங்கட்கிழமை காலை 10 மணிக்குள் பதிவேற்றம் செய்யவும்.

14.03.2022 திங்கட்கிழமை பகல் 1 மணிக்கு மாநிலத் திட்ட இயக்குநர் (ஒபக) அவர்களின் மீளாய்வு நடைபெறவுள்ளதால் அனைத்து அரசுப் பள்ளிகளிலும் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் உடனடியாக தயாரித்து EMIS Portal-ல் Upload செய்யுமாறு அனைத்து மேற்பார்வையாளர்கள் (பொ), அனைத்து உதவிக் கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து அரசு பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11/03/22

முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

இணைப்பு – பார்வையில் காண் கடிதம்.

**பெறுநர் :**

1. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
3. அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள்.

**நகல் :**

1. மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்.
2. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம் அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.